வகுப்பு : 10

தேர்வு எண்: | | | | | | |

# முதல் திருப்புதல் தேர்வு, ஜனவரி - 2024

நேரம் : 3.00 மணி] **தமிழ்** [மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்புகள் : i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.
ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி – I (மதிப்பெண்கள்:15)

குறிப்புகள்: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினைச் சேர்த்து எழுதவும்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக.** 15X1=15

1. 'அன்னை மொழியே' கவிதை இடம்பெறும் நூல்
அ) நூறாசிரியம் ஆ) கனிச்சாறு இ) எண்சுவை எண்பது ஈ) பாவியக்கொத்து

2. உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்றவர்?
அ) திருமூலர் ஆ) அகத்தியர் இ) வள்ளுவர் ஈ) தொல்காப்பியர்

3. காசிக்காண்டம் என்பது ------
அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல் ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறு பெயர்
இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல் ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

4. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது --------
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

5. எய்துவர் எய்தாப் பழி – இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?
அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்
இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு

6. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

7. 'சதம்' என்றால் ------ என்று பொருள்.
அ) பத்து ஆ) நூறு இ) ஆயிரம் ஈ) இலட்சம்

8. மலர்கள் தரையில் நழுவும் எப்போது?
அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால் இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

9. பிள்ளைத்தமிழில் இடம் பெறும் பருவங்கள் -------
அ) 8 ஆ) 10 இ) 12 ஈ) 7

10. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச்சூடிப் போரிடுவதன் காரணம் ----
அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

11. 'சித்தாளின் மனச்சுமைகள் செங்கற்கள் அறியாது' எனக் குறிப்பிடும் கவிஞர்?
அ) நாகூர் ரூமி ஆ) கண்ணதாசன் இ) ஜெயகாந்தன் ஈ) பாரதியார்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.

*"வண்மையில்லை யோர்வறுமை யின்மையால்*
*திண்மையில்லை நேர்செறுந ரின்மையால்*
*உண்மையில்லை பொய்யுரை யிலாமையால்*
*வெண்மையில்லை பல்கேள்வி மேவலால்"*

12. இச்செய்யுள் இடம்பெற்ற நூல் ------
அ) கம்பராமாயணம் ஆ) புறநானூறு இ) கலித்தொகை ஈ) பரிபாடல்



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

13. வண்மை என்ற சொல்லின் பொருள் ------

அ) வலிமை ஆ) கொடை இ) வறுமை ஈ) விடை

14. பொய்யுரை – பிரித்தெழுதுக.

அ) பொய் + யாரை ஆ) பொ + யாரை இ) பொய் + உரை ஈ) பொய்யு + உரை

15. கோசலநாட்டில் அறியாமை இல்லை. ஏன்?

அ) கேள்விச்செல்வம் மிகுதலால் ஆ) அறிவு மிகுந்ததால்

இ) வெற்றி மிகுந்ததால் ஈ) செறிவு மிகுந்ததால்

பகுதி – II (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

**வினா எண் 21–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 4X2=8

16. பாரதியாரின் படைப்புகள் சிலவற்றைக் கூறு.

17. 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' – இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

18. 'நேற்று நான் பார்த்த அர்ச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிழ்ந்தேன்!' என்று சேகர் என்னிடம் கூறினான். இக்கூற்றை அயற்கூற்றாக மாற்றுக.

19. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.

20. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

21. 'கண்' என்று முடியும் குறட்பாவை எழுதுக.

பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5X2=10

22. பொழுது எத்தனை வகைப்படும்? அவை யாவை?

23. ஜெயகாந்தன் இயற்றிய குறும்புதினங்களுள் ஏதேனும் நான்கினைக் குறிப்பிடுக.

24. பகுபத உறுப்பிலக்கணம் தருக. பதிந்து

25. அழைப்பு மணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார் – தனிச் சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடர்களாக மாற்றுக.

26. கலைச்சொல் தருக. Emblem, Thesis

குறிப்பு : செவி மாற்றுத் திறனாளிகளுக்கான மாற்று வினா.

வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக. காண், சிரி

27. பாடாண் திணையை விளக்குக.

28. வெளிப்படை விடைகள் எத்தனை வகை? அவை யாவை?

பகுதி – III (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2X3=6

29. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது – இதுபோல் இளம் பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

31. "அறப்பணி ஓய்வதில்லை, ஓய்ந்திடில் உலகமில்லை" – எனக் கவிஞர் கூறக் காரணம் யாது?

பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.**

**வினா எண் 34–கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 2X3=6

32. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்பினார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

33. 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' – இடஞ்சுட்டி பொருள் விளக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) 'தண்டலை மயில்கள் ஆட' என்று தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.

(அல்லது)

ஆ) 'மாற்றம் எனது மானிடத் தத்துவம்' எனத் தொடங்கும் காலக்கணிதப்பாடல்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பிரிவு – 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2X3=6

35. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும், இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தில் கருதுகிறார். உறவினர் வேறு. விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். அதனால் 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.

அ) விருந்தினர் என்போர் யாவர்?

ஆ) விருந்து குறித்துத் தொல்காப்பியர் கூறியது யாது?

இ) இவ்வுரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

36. "*கண்ணே கண்ணுறங்கு!*
*காலையில் நீ யெழும்பு!*
*மாமழை பெய்கையிலே*
*மாம்பூவே கண்ணுறங்கு!*
*பாடினேன் தாலாட்டு!*
*ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!*" இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

37. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை – இக்குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி – IV (மதிப்பெண்கள்:25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 5X5=25

38. மொழிபெயர்க்க:

Once upon a time there were two beggars in Rome. The first beggar used to cry in the streets of the city, "He is helped whom God helps". The Second beggar used to cry, "He is helped who the king helps". This was repeated by them everyday. The Emperor of Rome heard it so often that he decided to help the beggar who popularized him in the streets of Rome. He ordered a loaf of bread to be baked and filled with pieces of gold. When the beggar felt the heavy weight of the bread, he sold it to his friend as soon as he met him. The latter carried it home. When he cut the loaf of bread he found sparkling pieces of gold. Thanking God, he stopped begging from that day. But the other continued to beg through the city. Puzzled by the beggar's behaviour, the Emperor summoned him to his presence and asked him, "What have you done with the loaf of bread that I had sent you lately?" The man replied, "I sold it to my friend, because it was heavy and did not seem well baked" Then the Emperor said, "Truly he whom God helps is helped indeed," and turned the beggar out of his palace.

குறிப்பு: செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.

பத்தியைப் படித்துப் பதில் தருக.

சுந்தரர் இயற்றியது திருத்தொண்டர்த் தொகை நம்பியாண்டார் நம்பியால் எழுதப்பட்ட நூல் திருத்தொண்டர் திருவந்தாதி. இவ்விரு நூல்களையும் அடிப்படையாகக் கொண்டு சேக்கிழாரால் இயற்றப்பட்டதே திருத்தொண்டர் புராணம். இதன் பெருமை காரணமாக இது பெரிய புராணம் என்று அழைக்கப்படுகிறது. இவ்வாசிரியரை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ" எனப் பாராட்டியுள்ளார்.

வினாக்கள்:

அ) சுந்தரர் இயற்றிய நூலின் பெயர் என்ன?

ஆ) திருத்தொண்டத் திருவந்தாதியின் ஆசிரியர் யார்?

இ) பெரிய புராணத்தை இயற்றியவர் யார்?

ஈ) மீனாட்சி சுந்தரனார் பெரிய புராணத்தின் ஆசிரியரை எவ்வாறு பாராட்டியுள்ளார்?

உ) பெரிய புராணத்தின் மறு பெயர் என்ன?




Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

39.அ) இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

(அல்லது)

ஆ) உமது பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள மெய்க்கீர்த்தி பாடலின் நயத்தை விளக்குக.

40.படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



41.வீட்டு எண் 12, திருவள்ளுவர் தெரு, குமரன் நகர், கடலூர் மாவட்டத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பினை நிறைவு செய்த மாணிக்கம் என்பவரின் மகன் அமுதன் எழுத்தர் பணியில் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை கலைச்செல்வனாகக் கருதி கொடுக்கப்பட்டுள்ள தன் விவரப் படிவத்தை நிரப்புக.

42.அ) உங்கள் தெருவில் மின் விளக்குகள் பழுதடைந்து உள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

## பகுதி – V (மதிப்பெண்கள்: 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3X8=24

43.அ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் "செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்" பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.

44.அ) கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே – என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடம் இருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துக்களை விவரிக்க.

(அல்லது)

ஆ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45.அ) நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டு முன்னேற்றத்தில் மாணவர் பங்கு. குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை வரைக.

(அல்லது)

ஆ) சாலைப் பாதுகாப்பு என்ற தலைப்பில் கட்டுரை வரைக.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



41. கொடுக்கப்பட்டுள்ள தன்விவரப் படிவத்தினை நிரப்புக.

## தன் விவரப் படிவம்

1. பெயர் : ______________________
2. வகுப்பு : ______________________
3. பள்ளி : ______________________
______________________
4. பெற்றோர் : ______________________
______________________
5. முகவரி : ______________________
______________________
______________________
______________________
6. தொலைபேசி எண் : ______________________

www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com